# தூய மரியாவின் அமல உற்பவம் (டிசம்பர் 08)



# புனித கன்னிமரியின் அமல உற்பவம்

புனித மரியாளின் ஆன்மாவை ஜென்மப் பாவத்தின் கறை ஒரு வினாடி முதலாய் தொட்டதில்லை. அவள் உற்பவித்த முதல் வினாடியிலிருந்தே கடவுளது வரங்களை நிரம்பப் பெற்றிருந்தாள். வர இருந்த இரட்சகரின் பேறுபலன்கள் அவளது ஆன்மாவை ஜென்மப்பாவம் கறைப்படுத்தாதபடி தடுத்தன. கிறிஸ்துநாதரது மீட்பின் வல்லமையானது அவளை கர்மப்பாவத்தினின்று மாத்திரமல்ல. ஆனால், ஜென்ம பாவத்திலிருந்தும் காப்பாற்றியது. கடவுளுடைய அன்னையாக வேண்டியவளது ஆன்மா இவ்விதம் தூய்மையாய் இருப்பது முற்றிலும் நியாயமே. ஒரு வினாடி முதலாய் பாவக்கறைக்குட் பட்டிருந்தவளது உடலில் தேவசுதன் உருவாகிறது சரியன்று. இறைவன் நித்தியத்திலிருந்தே மீட்பின் வேலையைத் திட்டமிட்டு மரியாள் உலக இரட்சகரின் தாயாக இருக்க வேண்டும் என்று நித்தியத்திலிருந்தே தீர்மானித்தார். அவள் என்றும் இறைவன் கண்முன் நிற்கிறாள். கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு நாள் அன்று கபிரியேல் தூதர் அவளது ஆன்மாவின் அழகைக்கண்டு, “அருள் நிறைந்தவளே வாழ்க” என்று அவளை வாழ்த்தினார். இந்த சொற்களை திருச்சபையின் முதுபெரும் தந்தையர் அழகாக விரித்துரைத்திருக்கிறார்கள். ‘கன்னிமரியாள் அனைத்திலும் எக்காலத்திலும் தூய்மையாய் இருந்தாள். தன் உற்பவத்திலும் மரியாள் தூய்மை உள்ளவளாய் இருந்தாள். வானதூதர்களை விட இவள் அதிக தூய்மை உள்ளவள். பாவக்கறை இவளை ஒரு போதும் அணுகியதில்லை’.

இவ்விழாவை எட்டாம் நூற்றாண்டிலிருந்து கிழக்கத்திய சபையில் டிசம்பர் 9-ஆம் நாள் அன்று கொண்டாடினார்கள். மேற்கத்திய சபையில் இது பதினோராம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. முதலில் இவ்விழாவைக் கொண்டாடியவர் இங்கிலாந்து நாட்டினரே. 14-ஆம் நூற்றாண்டில் இருந்து, இது அகில திருச்சபையிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

கன்னிமரியாள் அமல உற்பவி என்று 08.12.1854ல் 9-ஆம் பத்திநாதர் பாப்பானவர் பிரகடனம் செய்தார். இது வேத சத்தியம். இதை நாம் வேத புத்தகத்தில் பார்க்கிறோம். “உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை ஏற்படுத்துவேன்” (ஆதி. 3:15) “அருள் நிறைந்தவள்” (லூக். 1:2:4) இங்கு நாம் பார்க்கும் சொற்களிலிருந்து கன்னிமரியாள் அமல உற்பவி என்று தெளிவாகத் தெரிகிறது. இவ்விதம் ஆதியிலிருந்தே மக்கள் விசுவசித்து வருகின்றனர்.

**சிந்தனை:**

அமல உற்பவம் தேவதாயின் மகிமைகளில் ஒன்று. என்ன வரம் கேட்டாலும் அன்னை தருகிறாள். “மரியே உமது அமில உற்பவத்தைக் குறித்து, நான் ஆன்ம சரீர கற்பும் தாழ்ச்சியும் உள்ளவனாய் இருக்க முடியும்” என்று ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் மூன்று முறை சொல்லி மங்களவார்த்தை மன்றாட்டையும் மும்முறை செபித்து நமக்குத் தேவையான புண்ணியங்களைக் கேட்போம்.

**செபம்:**

பாவமில்லாமல் உற்பவித்த மரியாயே, உம்மைத் தேடி வரும் எங்களுக்காக மன்றாடும்.